அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) முதன்முறையாக மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, 1993 ஆம் வருடம்தான் முதலில் மனித உரிமைக்கு என்று தனியாக காவல் துறையிலே ஒரு பிரிவு உருவாக்கப்பட்டது. பெண் காவல் அதிரடிப் படை 4—10—2003 அன்று மாண்புமிகு அம்மா அவர்களால் தொடங்கப்பட்டது. பெண் காவல் அதிரடிப் படையினர் இன்று வன்முறையாளர்களை எதிர்கொள்ளுதலிலும், துப்பாக்கிச் சுடுதலிலும் ஆண் காவல் அதிரடிப் படையினருக்கு நிகராக விளங்குகின்றனர் என்றால், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்குக் காரணம் மாண்புமிகு அம்மா அவர்கள் அன்றைக்கு எடுத்த நடவடிக்கைகள்தான்.

முற்பகல் 10—30

இந்தியாவிலேயே முதன்முறையாக காவல் துறையினர் குறைந்த விலையில் பொருள்கள் பெறும்வகையில் பல்பொருள் அங்காடிகள், அதாவது, கேண்டீன்கள் மாண்புமிகு அம்மா அவர்களால் திறந்துவைக்கப்பட்டுள்ளன. இவ்வாறு காவல் துறையிலே பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வரும் மாண்புமிகு அம்மா அவர்கள், இன்றைக்கு தமிழ்நாடு சிறப்புக் காவல் இளைஞர் படை உருவாக்கும் வகையில் அறிவிப்பு தந்தமைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுக்கு, இங்கு மாண்புமிகு உறுப்பினர்கள் குறிப்பிட்டுள்ள பாராட்டுக் கருத்துகளோடு என்னுடைய கருத்துகளையும் இணைத்து எனது நெஞ்சார்ந்த நன்றியை புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்குக் காணிக்கையாக்குகிறேன்.

4. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைத் துணைத் தலைவர் தேர்தலுக்கு 26—10—2012 ஆம் நாள் நண்பகல் 12—00 மணி வரை ஒரு நியமனத் தாள் மட்டுமே பேரவைச் செயலாளரால் பெறப்பட்டுள்ளது.

பேரவை விதி 7 (4)—ன்படி இப்பதவிக்கு நியமனம் பெற்றவர், முன்மொழிந்தவர், வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை முதலில் நான் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம் வருமாறு:

நியமனம் செய்யப் பெற்றவர்	:	திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
முன்மொழிந்தவர்	:	மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)
வழிமொழிந்தவர்	:	மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

ஒரே உறுப்பினர் மட்டும் நியமனம் செய்யப்பெற்றிருப்பதால் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதைப் பேரவைக்கு மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி)

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தனது இருக்கையில் வந்து அமர்ந்தார்.)

5. பேரவைத் துணைத் தலைவருக்குப் பாராட்டுரைகளும், நன்றியுரையும்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எளியோர்க்கு உரிமைக் குரலாய் ஒலிக்கும் அற்புதம், அண்டியவர்களுக்கு ஆல்போல் நிழல் கொடுக்கும் அன்புச் சரணாலயம், மனித சக்தி கடந்த மகா சக்தி எனத் திகழும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியோடு மண்புமிகு பேரவைத் துணைத் தலைவராக மாண்புமிகு உறுப்பினர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் அவர்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இந்தச் செய்தியை அறிவிக்கின்ற வாய்ப்பைப் பெற்றதில் உள்ளபடியே பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.